மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பிண்ணக்கு அவசியம் என்பதை இந்த சர்க்கார் உணருகிறது என்று இரண்டு கேள்விகளுக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். மணிலாப் பயிர் செய்பவர்கள், மணிலாப் பிண்ணக்கு அதிகமாக வெளிநாடுகளுக்குப் போனுல், மணிலாவுக்கு அதிக விலை கிடைக்குமென்று எண்ணுகிருர்கள். நான் நேற்று தென் ஆர்க்காடு மாவட்டத்திற்குச் சென்றிருந்தேன். தென் ஆர்க்காடு மாவட்டத்தை மணிலா மாவட்டம் என்ற வேறு பெயருடன்தான் அழைக்கிருர்கள். இங்கு உற்பத்தியாகின்ற பிண்ணக்கு இங்கிருக்கும் விவசாயிகளுக்கு உபயோகப்பட வேண்டுமென்பதுதான் இந்த சர்க்காரின் எண்ணம். ஆகவே, முக்கியமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைத் தடை செய்ய வேண்டுமென்று மத்திய சர்க்காரின் அனுமதி கோரப்பட்டிருக்கிறது.

திரு. கே. விநயகம் : ஐயா, பிண்ணக்கு ஒரு வேளை விவசாயத்திற்கு அத்தியாவசியமாகக் கருதப்பட்டாலும் கூட அப்பேர்ப்பட்ட பொருள்களை அந்நிய நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதனுல் அந்நியச் செலவாணி கிடைக்கிறது. அதை வைத்துக்கொண்டு தொழில் அபிவிருத்திக்குப் பல இயந்திரங்களை வெளிநாடுகளிலிருந்து வாங்குகிறோம் என்பது உண்மையா? ஆகவே வெளிநாடுகளுக்கு நாம் ஏற்றுமதி செய்கிற பொருள்களைத் தடை செய்யாது ஏற்றுமதி செய்ய இந்த அரசாங்கம் தொடர்ந்து அனுமதிக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது இரண்டாவது கருத்து. நமக்கு அந்நியச் செலாவணி தேவைதான். ஆனுல் ரசாயன உரம் கிடைக்காத காரணத்தினுல் பிண்ணக்கு விவசாயிகளுக்கு உடனடியாகத் தேவைப்படுகிறது என்பதை உணர்ந்து அதன் ஏற்றுமதியைத் தடை செய்ய அரசாங்கம் யோசனை செய்து வருகிறது. அந்நியச் செலவாணி விஷயம் அரசாங்கத்திற்குத் தெரிந்துதான் இருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : பிண்ணக்கு எந்த எந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது? அந்த அந்த நாடுகளில் இருந்து என்ன என்ன பொருள்கள் தருவிக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அதைப்பற்றிய விவரம் என்னிடம் இல்லை. புள்ளி விவர இலாகாவுக்கு எழுதியும் அது தரப்படவில்லை என்று சொல்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : வெளிநாடுகளில் இந்தப் பிண்ணக்கை வாங்கிக்கொண்டு போய் மாட்டு சூப், ஆட்டு சூப் முதலியவற்றை எல்லாம் சேர்த்து பிஸ்கெட்டுகளாக நமக்கே அனுப்பி பத்து பங்கு லாபம் பெறுகிருர்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நாம் அனுப்புகிற கச்சாப் பொருள்களை, அவர்கள் தங்கள் அறிவு வளர்ச்சியின் பயனுக பிஸ்கெட்டு களாகவும், வாசனை எண்ணெய் வகைகளாகவும் நமக்குத் திருப்பி அனுப்புகிருர்கள் என்பதை அரசாங்கம் உணர்ந்துதான் இருக்கிறது.

பூச்சிக் கொல்லி மருந்து

*** 377** வினு.—**திரு. கொளத்தூர் கோதண்டம், திரு. பி. வேங்கடசாமி, திரு. வி. டி. அண்ணமலை :** } மதிப்பிற்குரிய வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உணவுப் பயிர்களுக்கும் பணப் பயிர்களுக்கும் (Cash crops) முறையே பூச்சி கொல்லி மருந்துகள் கொடுக்கப்படும்போது சர்க்கார் மான்யம் எவ்வளவு தரப்படுகிறது?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தற்போது உணவுப் பயிர்களுக்கு பூச்சிக் கொல்லி மருந்துகள் விற்பனையின்மீது அவற்றின் விலையில் 25 சத வீதம் உதவித்தொகை வழங்கப்படுகின்றது. சில வாணிகப் பயிர்களுக்குப் பூச்சி கொல்லி மருந்துகள் விற்பனையின் மீது விலையில் 50 சத வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது,

இரண்டு தினங்களுக்கு முன் விவசாயத் துறை மானியத்திற்குப் பதில் அளிக்கிற நேரத்தில் உணவுப் பொருளின் அவசியத்தை உணர்ந்து பூச்சிக் கொல்லி மருந்து 50 சத வீதம் உணவுப் பயிர்களுக்கும் சப்சிடி கொடுக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தியதன் காரணமாக வாணிகப் பயிர்களுக்கு 50 சத வீதம் கொடுத்துவந்த சப்சிடியை 35 சத வீதம் ஆகக் குறைத்து, உணவுப் பயிர்களுக்கும், 35 சத வீதம் சப்சிடி கொடுப்பது என்பதாக—இரண்டுக்கும் சமமாக மானியம் வழங்கும் முடிவு ஒன்றை இந்த அரசு செய்துள்ளது என்பதை இந்த மன்றத்தில் அறிவித்திருக்கிறேன்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, வாணிகப் பயிர்களுக்கு 35 சதவீதம் மானியம் என்று குறிப்பிட்டார்கள். புயலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலாவது தென்னை மரப் பாதுகாப்புக்கு 50 சதவீதம் என்ற அளவிலாவது கொடுக்க முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : புயலினால் பாதிக்கப்பட்ட பகுதிகள் சம்பந்தப்பட்டவரை அரசு என்ன செய்யும் என்பது பற்றி இந்த மன்றத்தில் நான் அளித்துள்ள விவரமான அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

THIRU B. VENKATASWAMY : Sir, nowadays, it is very difficult for the ryots to buy pesticides and fungicides because their prices have been increased as cmpared to the last year. But the procurement price is not increased proportionately. So, will the Government come forward to raise the price of foodgrains or give 50 per cent subsidy to pesticides and fungicides ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் அவர்கள் முதல் கேள்விக்குப் பதில் அளித்திருப்பதைக் கூர்ந்து பார்த்திருந்தால் இந்தக் கேள்வி எழுந்தே இராது. பணப் பயிருக்கும் உணவுப் பயிருக்கும் இன்றைக்கு 35 சத விகிதம் உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தற்சமயம் பணப் பயிர்களுக்கு 75 சத விகிதம் அரசாங்க மானியம் ஆக சப்சிடி கொடுக்கப்படுகிறது. அதை 50 சத விகிதமாகக் குறைத்து உணவுப் பெருக்கத்தின் யோசனையை முன்னிட்டு, தற்சமயம் உணவுப் பயிருக்காக கொடுக்கப்படும் 35 சத விகிதம் சப்சிடியை 50 சத விகிதமாக உயர்த்த சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்போது இந்த அளவு சலுகை வழங்கப்பட்டதன் மூலமாக தமிழக சர்க்காருக்கு 10 லட்சம் ரூபாய் கூடுதல் செலவாகிறது. கனம் அங்கத்தினர் கேள்விப்படி அதிகச் சலுகை அளிக்க, சர்க்காரின் நிதி நிலை தற்போது சரியாக இல்லாததால் முடியாத நிலையில் இருக்கிறது. இப்போது அளிக்கப்பட்டிருக்கும் சலுகையிலேயே விவசாயிகள் ஓரளவு திருப்தி அடைந்திருக்கிறார்கள்.

கரும்புத் தீர்வை

*** 378. வினா—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் ரோட்டு வசதிகள் செய்வதற்காக **Sugar cane cess fund** ஆக இதுவரை எவ்வளவு தொகை கொடுத்துள்ளார்கள் ?

(இ) அதில் ரோட்டு அபிவிருத்தி செய்ய எவ்வளவு செலவு செய்யப்பட்டுள்ளது : மாவட்ட வாரியாக, சர்க்கரை மில் வாரியாக ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) —(இ) சபை முன் விவர அறிக்கை (a) ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

---

a 565–566-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.